


தினப்புயல்
PIN news
THINAPPUYAL
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




## தொல்பொருள் திணைக்களம் மக்களிடையே இனவாதத்தை ஏற்படுத்தவே பயன்படுத்தப்படுகின்றது – சாணக்கியன்



தொல்பொருள் திணைக்களம் மக்களிடையே இனவாதத்தை ஏற்படுத்தவே பயன்படுத்தப்படுகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (செவ்வாய்கிழமை) கேள்வி நேரத்தின் போதே இவ்வாறு குற்றம் சுமத்தியுள்ளார். இதன்போது கருத்து வெளியிட்ட அவர், "அமைச்சர் அவர்களே நீங்கள் ஒரு இனவாதி. நீங்கள் கடந்த காலத்திலே மட்டக்களப்பிற்கு வந்தபோதும் குசலான மலையில் வைத்து உங்களை தடுத்து அனுப்பியமை காரணமாகவே இன்றும் குசலான மலையில் சைவ சமய வழிபாடுகளை செய்ய முடிகின்றது.

இந்த தொல்பொருள் திணைக்களத்தினை வைத்துக்கொண்டு நீங்கள் இந்த நாட்டுக்குள்ளே மீண்டும் ஒரு குழப்பத்தினை ஏற்படுத்தவே முயற்சிக்கின்றீர்கள். வெடுக்குநாரி மலையிலே ஒரு குழப்பம், குருந்தூர் மலையிலே ஒரு குழப்பம், குசலான மலையிலே ஒரு குழப்பம், அரிசி மலையிலே ஒரு குழப்பம், தற்போது திருகோணமலை புல்மோட்டையிலே ஒரு குழப்பம்.

இந்த நாட்டினுள் ஐ.எம்.எப் ஒப்பந்தம் வந்தாலும் சரி உங்களைப் போன்ற இனவாதிகள், உங்களைப்போன்ற இனவாத அமைச்சர்கள், இந்த தொல்பொருள் திணைக்களத்தினை வைத்துக்கொண்டு, வடக்கு கிழக்கில் எங்களுடைய காணிகளை சுவீகரிக்கின்றீர்கள். தொல்பொருள் செயலணி என்பது தொல்பொருளை பாதுகாக்க வேண்டும் என்பதில் நாங்களும் உறுதியாக இருக்கின்றோம்.

ஆனால் தொல்பொருள் என்ற போர்வையில் ஏன் பௌத்த பிக்குகள் வரவேண்டும். ஏன் அதிகாரிகள் இல்லையா? சோறுக்கும் தண்ணிக்கும் வழியில்லாமல் இருக்கும் போதும் கூட தொல்பொருள் திணைக்களத்திற்கு பணம் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இவ்வாறான இனவாத செயற்பாடுகள் தொடருமாக இருந்தால், ஐ.எம்.எப் மட்டும் இல்லை எவராலும் இந்த நாட்டை காப்பாற்ற முடியாது.

இந்த தொல்பொருள் செயலணியும், தொல்பொருள் திணைக்களமும், நீங்களும், இந்த அரசாங்கமும் இனவாதத்திற்காகவே இதனை பயன்படுத்துகின்றீர்கள். இதனை உடனடியாக நிறுத்தாவிட்டால் வடக்கு கிழக்கினை நாங்கள் முடக்குவோம். உங்களைப்போன்ற இனவாதிகள் வடக்கு கிழக்கிற்கு வர முடியாதவாறு முடக்குவோம்." எனத் தெரிவித்துள்ளார்.

## வரி வருமானம் அதிகரித்துள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிவிப்பு

இந்த வருடத்தின் முதல் காலாண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தனிநபர் முற்பண வருமான வரி தொடர்பான வருமானமாக 25,577 மில்லியன் ரூபாவை ஈட்டியுள்ளது.

ஜனவரி மாதத்தில் 3,106 மில்லியன் ரூபாவும் பெப்ரவரியில் 10,540 மில்லியன் ரூபாவும் வசூலித்துள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மார்ச் மாதத்தில் 11,930 மில்லியன் ரூபா வரி வருமானம் ஈட்டப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, ஜனவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கு இடையில் வரி வருமானத்தில் படிப்படியாக அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக திணைக்களம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

## மன்ஹாட்டன் நீதிமன்றத்தில் ஆஜரான டிரம்ப் அதிரடி கைது



அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப், ஆபாச நடிகை ஸ்டார்மி டேனியல்ஸ்சுக்கு பணம் கொடுத்த விவகாரத்தில் சிக்கியுள்ளார். கடந்த 2016ம் ஆண்டு டிரம்ப், அதிபர் தேர்தலில் போட்டியின்போது அவருடன் இருந்த ரகசிய உறவு குறித்து ஸ்டார்மி டேனியல்ஸ் பரபரப்பு தகவலை வெளியிட்டார். இந்த குற்றச்சாட்டை டிரம்ப் திட்டவட்டமாக மறுத்தார். தேர்தல் பிரசார சமயத்தில் ஆபாச நடிகை ஸ்டார்மி வெளியிட்ட தகவலால் டிரம்புக்கு தர்ம சங்கடம் ஏற்பட்டது.

இதையடுத்து இவ்விவகாரத்தை ஸ்டார்மி பேசாமல் இருக்க அவருக்கு ரூ.1.07 கோடி டிரம்ப் மூலம் வழங்கப்பட்டது. இந்த தொகை டிரம்பின் தேர்தல் வரவு, செலவு கணக்கில் சட்ட ரீதியிலான செலவு என்று குறிப்பிடப்பட்டது. அமெரிக்காவில் பொய்யாக வணிக செலவை காட்டுவது சட்ட விரோதம் என்பதால் டிரம்ப் மீது விசாரணை நடந்து வந்த நிலையில் அவர் மீது சமீபத்தில் தேர்தல் பிரசார வணிக சட்டத்தின் கீழ் கிரிமினல் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது. இதனால் டிரம்ப் கைது செய்யப்படுவார் என்று தகவல் வெளியானதால் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த வழக்கில் நியூயோர்க்கில் உள்ள மன்ஹாட்டன் நீதிமன்றத்தில் விசாரணை நடந்து வருகிறது. இந்த நிலையில் ஆபாச நடிகைக்கு பணம் கொடுத்த வழக்கில் நேற்று கோர்ட்டில் டிரம்ப் சரண் அடைவதாக கூறப்பட்டது. இதற்காக அவர் புளோரிடாவில் இருந்து விமானத்தில் நியூயோர்க்குக்கு புறப்பட்டார். சுமார் 2.30 மணி நேர பயணத்துக்கு பிறகு நியூயோர்க்கை வந்தடைந்த டிரம்ப் அங்குள்ள டிரம்ப் டவர் கட்டிடத்துக்கு சென்றார். அப்போது திரண்டிருந்த அவரது ஆதரவாளர்களை பார்த்து கையசைத்தபடி சென்றார். அங்கு இரவு தங்கிய டிரம்ப் வழக்கு விசாரணைக்காக மன்ஹாட்டன் கோர்ட்டில் ஆஜர் ஆனார். அங்கு, சுமார் 10-15 நிமிடங்கள் நடைபெறும் விசாரணையில் குற்றப்பத்திரிகையில் உள்ள குற்றச்சாட்டுகள் அவருக்கு வாசிக்கப்பட்டது. இந்நிலையில், டிரம்ப் கைது செய்யப்பட்டார். அவரிடம் கைரேகை பதிவு செய்யப்பட்டது. டொனால்ட் டிரம்ப் கோர்ட்டில் கைது செய்யப்பட்டுள்ளது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## பீடாதிபதியாக பேராசிரியர் சுனில் ஆரியரத்ன



கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகத்தின் பீடாதிபதியாக பேராசிரியர் சுனில் ஆரியரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

1985 ஆம் ஆண்டு 07 இலக்கச் சட்டத்தின் திருத்தம் செய்யப்பட்ட 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 32 வது உறுப்புரைக்கமைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்த ஐந்தாண்டு பதவிக்கால நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைவான நியமனக்கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் பேராசிரியர் சுனில் ஆரியரத்னவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## இலங்கையை வீழ்த்திய நியூசிலாந்து

இலங்கை அணிக்கும் நியூசிலாந்து அணிக்கும் இடையிலான 2 வது ரி20 போட்டியில் நியூசிலாந்து அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது. நாணய சுழற்சியை வென்ற நியூசிலாந்து அணித்தலைவர் இலங்கை அணியை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தார்.

அதன்படி களம் இறங்கிய இலங்கை அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 19 ஓவர்கள் நிறைவில் 141 ஓட்டங்கள் எடுத்தது. இலங்கை அணி சார்பாக குசல் பெரேரா 35 ஓட்டங்களையும் தனஞ்சய சில்வா 37 ஓட்டங்களையும் பெற்றனர். நியூசிலாந்து அணி சார்பாக பந்துவீச்சில் Adam Milne 26 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். 142 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நியூசிலாந்து அணி 14.4 ஓவர்கள் நிறைவில் 1 விக்கெட் இழப்பிற்கு 146 ஓட்டங்களை பெற்று வெற்றி அடைந்தது. நியூசிலாந்து அணி சார்பில் Tim Seifert ஆட்டமிழக்காமல் 79 ஓட்டங்களை பெற்றார். 3 போட்டிகள் கொண்ட ரி20 தொடரில் இலங்கை அணியும், நியூசிலாந்து அணியும் தலா ஒரு போட்டியில் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## குச்சவெளியில் புத்தர் சிலை வைக்க பிக்கு முயற்சி - பாராளுமன்றில் இம்ரான் எம்.பி



பௌத்த பிக்கொருவர் அரிசிமலை, பொன்பரப்பிமலை போன்ற பிரதேசங்களில் புத்தர்சிலையொன்றை வைக்க முற்பட்டதனால், அங்கு பாரிய இன முறுகல் ஏற்பட்டதாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற (04) பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

திருகோணமலை - குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட முஸ்லிம் பிரதேசங்களில் புத்தர்சிலையொன்றை வைக்க முற்படும்போது, அப்பிரதேச மக்கள் ஒன்றிணைந்து அதனைத்தடுக்க முனைந்தனர். அவ்வாறு முன்வந்த பொதுமக்களுக்கு பிஸ்டலை காண்பித்து அச்சுறுத்தல் விடுத்ததால் அங்கு பாரிய இன முறுகல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தொல்பொருள் திணைக்களத்தின் விசேட வர்த்தமானி அறிவித்தல்கள், மக்களின் பாரம்பரிய வசிப்பிடம் தொடர்பில் கவனத்திற் கொள்ளப்படாமலேயே நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தொல்பொருள் திணைக்களத்தின் அதிகாரிகளோடு பௌத்த பிக்குகளும் செல்கிறார்கள். அதிகாரிகள் பார்க்கின்ற வேலைகளோடு அவர்களுக்கு அங்கு என்ன வேலை இருக்கிறது என்ற கேள்வியையும் இம்ரான் மஃரூப் எம்பி எழுப்பினார்.

குறித்த பிரதேங்களில் சிலை வைப்பு விவகாரம் தொடர்பில் புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சரிடம் நேரடியாக பல கேள்விகளையும் எழுப்பினார். அதற்கு அமைச்சர் பதிலளிக்கையில், இது தொடர்பாக, தனக்கு எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை என்றும் அதனை ஆராய்ந்து விளக்கத்தை தருவதாகவும் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க பதிலளித்துள்ளதாகவும் தெரிவித்தார். (அபு அலா)

## வாகனங்களுக்கான எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிப்பு

புத்தாண்டு பண்டிகை காலத்தில், ஏற்கனவே நடைமுறையில் இருந்த எரிபொருள் கோட்டாவை நேற்று (04) நள்ளிரவு முதல் அதிகரிக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கமைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

முன்னதாக திட்டமிட்டபடி, பண்டிகைக் காலத்தில் அதிகரிக்கும் எரிபொருள் தேவைக்கு ஏற்ப, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தேவையான கையிருப்புகளை முன்கூட்டியே பெற்றுக் கொண்டுள்ளது. அதன்படி ஒரு வாரத்திற்கு கீழ்கண்டவாறு பரிந்துரைக்கப்பட்ட கோட்டா விநியோகிக்கப்படவுள்ளது.

இதன்படி, முச்சக்கர வண்டிகளுக்கான பெற்றோல் 8 லீற்றராகவும் மோட்டார் சைக்கிள்களுக்கு 7 லீற்றராகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் பஸ்களுக்கு முன்னர் 40 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட்டு வந்த நிலையில், அது தற்போது 60 லீற்றராக அதிகரிக்கப்பட்டுள்ளது. கார்களுக்கு வழங்கப்படும் எரிபொருளின் அளவு 30 லீட்டராகவும், லொறிகளுக்கு வழங்கப்படும் எரிபொருளின் அளவை 75 லீற்றராகவும் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

| வாகனத்தின் வகை | தற்போது | புதிய கோட்டா |
|---|---|---|
| THREE WHEEL (Special) | 10 | 15 |
| THREE WHEEL (General) | 5 | 8 |
| MOTOR BIKE | 4 | 7 |
| BUS | 40 | 60 |
| CAR | 20 | 30 |
| LAND VEHICLE | 15 | 25 |
| LORRY | 50 | 75 |
| QUADRICE CYCLE | 4 | 6 |
| SPECIAL PURPOSE VEHICLE | 20 | 30 |
| VAN | 20 | 30 |

## விசேட புகையிரத சேவைத்திட்டம்



தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு நேற்று முதல் ஏப்ரல் 17 ஆம் திகதி வரை விசேட புகையிரத சேவைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

புகையிரத திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, வழக்கமான நீண்ட தூர சேவை புகையிரதங்களுக்கு மேலதிகமாக, புகையிரதங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

## கேன் வில்லியம்சனுக்குப் பதிலாக தசுன் ஷானக



இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் தசுன் ஷானக IPL போட்டித் தொடரில் குஜராத் டைட்டன்ஸ் அணியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குஜராத் டைட்டன்ஸ் அணி வீரர் கேன் வில்லியம்சனுக்கு ஏற்பட்ட உபாதை காரணமாக அவருக்கு பதிலாக தசுன் ஷானக அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

## டிக் டொக் செயலிக்கு தொடரும் தடை உத்தரவு




அமெரிக்கா, கனடா, பெல்ஜியம் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் டிக் டொக் செயலிக்கு தடை விதிக்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக இங்கிலாந்து அரசு அலுவலக செல்போன்களில் டிக்-டொக் செயலியை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டது. பாதுகாப்பு கருதி அந்நாட்டு அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

அரசின் முக்கிய அலுவலகங்களின் பாதுகாப்பு அம்சங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் அரசு அலுவலகங்களில் அரசுக்கு சொந்தமான மின்னணு சாதனங்களில் சீனா வீடியோவான டிக் டொக் செயலியை பயன்படுத்த தடை விதிப்பதாக இங்கிலாந்து பாராளுமன்றம் தெரிவித்தது.

இந்நிலையில், அவுஸ்திரேலியா அரசும் டிக் டொக் செயலிக்கு தடை விதித்துள்ளது. இது குறித்து பிரதமர் ஆண்டனி அல்பானிஸ் கூறுகையில், டிக் டொக் செயலியால் ஏற்படும் சாதக, பாதங்கள் குறித்து உள்துறை அமைச்சகம் அளித்துள்ள அறிக்கையின் அடிப்படையில் தடை செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

## வெள்ளப்பெருக்கில் சிக்கி 21 பேர் உயிரிழப்பு



ஆபிரிக்காவில் உள்ள சோமாலியா நாட்டில் கடந்த 2 வாரங்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் இங்குள்ள ஷெபெல்லே மற்றும் ஜூபா நதிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்து திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

இந்த வெள்ளப்பெருக்கால் பல வீடுகள், பள்ளி கட்டிடங்கள் சேதம் அடைந்தன. ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் தங்களது பகுதிகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்தனர். இருப்பினும் இந்த சம்பவத்தில் இதுவரை 21 பேர் பலியானதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

மீட்பு படையினர் தொடர்ந்து மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். வறட்சியால் பாதிக்கப்பட்ட சோமாலியாவுக்கு இந்த கனமழையானது ஓரளவு நிவாரணம் அளிக்கும் என்றாலும் தற்சமயம் அது ஏற்படுத்திய பாதிப்பில் இருந்து மீள சில நாட்கள் ஆகும் என கணிக்கப்பட்டுள்ளது.

பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரியின் கோரிக்கைக்கு அமைவாகவும், தாய் சேய் நலப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரியின் சிபாரிசுக்கு அமைவாகவும், பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் தாய் சேய் நலப்பிரிவினை மேம்படுத்தும் பொருட்டு இன்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் அவர்களின் தலைமையில் ஸ்மார்ட் தொலைக்காட்சி வழங்கி வைக்கப்பட்டது.



